**செய்தி வெளியீடு எண்: 1259** **நாள்:02.12.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் நேரில் ஆய்வு.

வட சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று (2.12.2021) காலையில் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டு சீரமைக்க ஆணையிட்டார்கள்.

சென்னையில் மழைநீர் வெள்ளத்தால் சிதிலமடைந்த தரமணி முதல் பெருங்குடி சாலைகள் வரை நேரில் சென்று அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். அப்போது தொழில்நுட்ப கருவிகளை கொண்டு சாலையில் உள்ள பள்ளங்களை சரிசெய்வதைக் கண்ட அமைச்சர் இப்பணியினை இந்த முறையினை பின்பற்றி விரைவாக செய்து முடிக்கும்படி உத்தரவிட்டார்கள்.

வட கிழக்கு பருவமழை காரணமாக புழல் ஏரியிலிருந்து வரும் உபரிநீர் சாலையில் சென்று பாதிப்பை ஏற்படுத்துவதால், இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, மாதவரம் - செங்குன்றம் சாலையில் ரூ.12.70 கோடியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி துவங்கும் நிலையில் உள்ளது. இப்பணி முடிந்தவுடன் சாலையில் உபரிநீர் கடந்து செல்வது தவிர்க்கப்படுவதுடன் சாலையும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

சென்னை வெளிவட்ட சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை - 5 சந்திப்பில் பாடியநல்லூரில் கட்டப்பட்டுவரும் ஒரு பல்வழி மேம்பாலப் பணியை பார்வையிட்டு விரைவில் முடிக்க ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வுப் பணியின்போது, மாதவரம் சட்ட மன்ற உறுப்பினர் திரு.சுதர்சனம் அவர்கள், மண்டல மேற்பார்வை அலுவலர் திரு.கணேஷ்பாஸ்கர், IAS., அவர்கள், மண்டல அதிகாரி திருமதி.ராஜேஸ்வரி, தலைமைப் பொறியாளர் திரு.சந்திரசேகர், கோட்டப் பொறியாளர் (சென்னை மாநகர சாலைகள்) திரு.சரவண செல்வம், நெடுஞ்சாலைத்துறை திரு.ஞானவேல், D.E., உதவிக் கோட்டப் பொறியாளர் திரு.ஆனந்தராஜ், அம்பத்தூர் உதவிக்கோட்டப் பொறியாளர் திரு.முரளிமற்றும் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**